தொகுதி - XVI ஆடி- 2016 இதழ் - 2

# சிந்தனை

பதிப்பாசிரியர்

**பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா**

கலைப்பீடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்

2017

**CINTANAI** The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI is a refereed Journal, Its referees come form University Scholars and the National scholarly community.

| | |
|---|---|
| **Editor** | Professor Selliah Krishnarajah |
| **Associate Editor** | Dr. K.Kajavinthan |
| **Managing Editor** | Dr. S. Santhirasegaram |
| **Editorial Committee Members** | Dr. K.Shriganeshan<br>Dr. K.Arunthavarajah<br>Dr. (Mrs) J. Rasanayagam<br>..................<br>Mr. R. Rajeshkannan<br>Mrs. S. Arulanantham<br>Mrs. S. Prabaharan |

| | |
|---|---|
| **Annual Subscription** | 1500/- SLR / 15US $ |
| Price Per Copy | 500/-SLR |
| **Published by** | The Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka. |
| **Printed by** | Harikanan (Pvt) Ltd., # 681, K.K.S. Road, Jaffna. |
| **ISSN** | **2478 - 1061** |

# யாழ்ப்பாணத்து இந்துக் கோயில்களும் அவற்றின் நிர்வாகப் பிரச்சினைகளும்

சாந்தினி அருளானந்தம்

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கைத்தீவின் வடபாலமைந்துள்ள யாழ்ப்பாணத்திற்கென தனித்துவமான இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியம் காணப்படுகின்றது. ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்குக் குறையாத இந்துப்பண்பாட்டு வரலாறு அதற்குள்ளதை தொல்லியல் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. பெருங்கற்பண்பாட்டுக் காலத்திலிருந்தே யாழ்ப்பாணத்தின் முன்னோடிச் சமயமான இந்து சமயம்( Proto Hiduism) வளர்ச்சி பெற்று வந்துள்ளமையை காணமுடிகின்றது. ஆயினும் கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட இந்துசமயத்தோடு தொடர்புபட்டிருந்த கோயில்களையும் அவற்றின் எச்சங்களையும் இன்று அடையாளம் காண்பது சிரமமானதாகும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கதிரைமலையை மையமாகக் கொண்ட உக்கிரசிங்கன் கதை (கதிரையாண்டார் கோயில்) மற்றும் மாருதப்புரவீகவல்லிகதை (மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்), நகுலமுனிவரின்கதை(நகுலேஸ்வரம்) போன்றன இந்துக்கோயில்களின் உருவாக்கத்தோடு தொடர்புபடுத்தப்படுவதைக் யாழ்ப்பாணவரலாற்றோடு தொடர்புடைய இலக்கியச்சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. போத்துக் கேயரின் ஆட்சியிலும் ஒல்லாந்தரின் ஆட்சியின் முற்பகுதியிலும் யாழ்ப்பாணத்துக் கோயில்கள் பல இடித்தழிக்கப்பட்ட வரலாறு பதியப்பட்டுள்ளது. ஒல்லாந்தர்ஆட்சியின் பிற்பகுதியில் வழங்கப்பட்ட சமயவழிபாட்டுக்கான அனுமதிக்குப் பின்னர் அமைக்கப்பட்ட கோயில்களே இன்று யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றன. அக்காலத்திலிருந்து இன்றுவரைப் பலகோயில்கள் யாழ்ப்பாணத்தில் காணப்பட்டாலும் அவை பல்வேறு காரணங்களினாலும் 30 ஆண்டுக்கால உள்நாட்டு யுத்தத்தினாலும் அழிக்கப்பட்டும், அழிவடைந்தும் காணப்படுகின்றன. இவற்றுள் பலகோயில்கள் அன்றும் இன்றும் நிர்வாக முரண்பாடுகளினால் நீதிமன்றங்களை நாடி வருவதனை அவதானிக்கமுடிகின்றது. யாழ்ப்பாணத்தில் பிரபல்யம்வாய்ந்த சிலஇந்துக்கோயில்களின் நிர்வாகப்பிரச்சினை தொடர்பான நீதிமன்ற வழக்குகள் பற்றியும் அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்தும் ஆராய்வதாகவே இக்கட்டுரை அமைகின்றது. இவ்வாய்வானது விபரண ஆய்வுமுறையியலை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கட்டுரைக்கான தரவுகள் இந்துசாதனப்பத்திரிகை மற்றும் நீதிமன்றப் பதிவேடுகள் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவை என்பதுகுறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்து இந்துசமுதாயம் இன்றுபல்வேறு சவால்களை எதிர்கொண்டே பாரம்பரியத்தையும் பண்பாட்டடையும் பாதுகாக்க வேண்டிய நிலையிலுள்ளது. சமூகத்தை நல்வழிப்படுத்தக் கூடிய கோயில்களால் அதனைச் செய்யமுடியவில்லை. இதற்கு அவற்றில் காணப்படும் நிர்வாகப் பிரச்சனைகளே பிரதான காரணமென்பதை எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள் :** நிர்வாகமுகாமை, கோயில்கள், நீதிமன்றம், வருமானம், முரண்பாடுகள்.

## அறிமுகம்

யாழ்ப்பாணத்திற்கு அண்மித்துக் காணப்படும் தமிழகத்தில் பல்லவர், சோழர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டிருந்த இந்துக் கோயில்களின் நிர்வாகமுகாமையானது அரசுக்கு நிகராக எழுச்சி பெற்றிருந்தது. குறிப்பாக சோழர்காலத்தில் பொதுமக்களின் வழிபாட்டிடமாக மட்டுமன்றிப் பாடசாலைகளாக, பல்கலைக்கழகங்களாக, வட்டிக்குப் பணம்வழங்கும் வங்கிகளாக,

வேலைவழங்கும் தொழில்நிறுவனங்களாக, மகாசபைகள் ஒன்றுகூடும் மையங்களாக, கலைகளின் அரங்கங்களாக, ஆதுலர்சாலைகளாக கோயில்கள் செயற்பட வேண்டியிருந்தமையால் அவற்றில் அரசசார்பான நிர்வாக முகாமைத்துவக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது (Nilakantha Sastri, 1975). அம்முறையானது இற்றைவரைக்கும் அங்கு பின்பற்றப்பட்டு வருவதனையும் காண்கின்றோம். ஆனால் யாழ்ப்பாணத்து இந்துக் கோயில்களைப் பொறுத்தவரையில் தமிழகக் கோயில் களைப்போன்று நிர்வாக முகாமைத்துவ அமைப்புமுறையை கொண்டிருக்காமையால், இக்கோயில்களின் நிர்வாக முகாமைத்ததுவம் தனிப்பட்டவர்களது கைகளுக்குச் சென்றுவிட்டிருந்தமையைக் காண லாம். தற்கால யாழ்ப்பாணத்து இந்துக்கோயில்கள் பெரும்பாலும் தனிப்பட் டவர்களின் சொத்துடமையாகவும், பிரதேசரீதியாக குறிப்பிட்ட சமூகம் மற்றும் சாதி சார்ந்தவையாகவும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இன்று குறிப்பிட்ட பெயரையுடைய தெய்வம் குறிப்பிட்ட சமூக, சாதி, பிரதேச, குடும்பப் பின்னணியைக் கருத்திற் கொண்டு வழங்கப்பட்டு, வணங்கப்பட்டு வருவதன் அடிப்படையில் இந்துக்கோயிற் சொத்துடமையானது தொடர்ந்தும் தனிப்பட்டவர் களது பரிபாலனத்திலிருப்பதற்குக் காரணமாகின்றது. எவ்வாறாயினும் மக்கள் இக்கோயில்களினூடாக விழாக்கள், கிரியைகள் என்பவற்றை நடாத்தி, தாம் சார்ந்த கிராமங்களின் அல்லது நகரங்களின் ஆன்மீகபண்பாட்டு வாழ்வுக்குப் பங்களிப்புச்செய்து வருகின்றனர். இவ்வாறான ஒரு வாழ்வுநிலையில் கோயில்வழிபாடென்பது பலதரப்பட்ட மக்களுக்கும் பொதுவாக இருப்பதாலும் நேர்த்திக்கடன்கள் மற்றும் விழாக்கள் முதலியன நடைபெறுகின்றமையாலும், வெளிநாட்டிலிருந்து பெறப்படுகின்ற பணம், பொருள் போன்றவற்றோடு தொடர்புபட்டனவாதலாலும். அங்கு பணிபுரிகின்ற கோயில் முகாமையாளர்களுக்கும், பிராமணர்களுக்கும், சிலவேளைகளில் வழிபடுபவர்களுக்கும் இடையில் பலதரப்பட்ட பிரச்சனைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. அதிலும் ஆகமமரபு சாராத பாரம்பரிய ஆலயங்கள் சமகால அரசியல், சமூக மாற்றங்களால் ஆகமம் சார் ஆலயங்களாக மாற்றம் பெறும்போது அக்கோயில்கள் தொடர்பான நிர்வாகப்பிரச்சனைகள் மேலும் சிக்கலானதாக மாற்றமடைவதைக் காணலாம். 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளிலிருந்த கோயில்களின் நிர்வாகப்பிரச்சனைகள் தொடர்பாக இந்துசாதனம், உதயதாரகை போன்ற பத்திரிகைகள் பல செய்திகளை தருகின்றன.

### சமூக ஒழுக்க விழுமியங்களும் கோயில்களும்

இந்துக்களின் வாழ்வியலில் கோயில்கள் மிகவும் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. மத்தியகாலத்திலிருந்து தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் எழுந்த இந்துக்கோயில்கள் அவை ஆற்றியிருந்த சமயச்சடங்குகள், விழாக்களூடாக மக்களது சமய விழுமியங்களையும், அதனுடாகச் சமூகஒழுங்கையும் நிலைநாட்டியிருந்தன. ஒவ்வொரு சமுதாயத்திலும் அனைத்து சமயத்தினருடைய வழிபாட்டிடங்களும் விழாக்களும் அச்சமயம் சார்ந்த நெறிமுறைகளைப் பேணுவதிலும், தத்தம் சமயம் சார்ந்தவர்களை நெறிப்படுத்துவதிலுமே பிரதான பங்கினை வகித்து வருகின்றன. வட இலங்கையிலும்குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் இந்துசமயத்தவர்களைப் பொறுத்தவரை ஆலயங்கள்வழிபாட்டிடங்களாக மட்டுமின்றி, ஒழுக்க விழுமியங்களையும், மரபுகளையும், சம்பிரதாயங்களையும், தொன்மங்களையும் மத்தியகாலத்திலிருந்து பேணிவந்தவகையில் கலாசாரத் தொடர்ச்சியை இம்மண்ணுடன் பிணைத்து, வளர்த்தெடுத்து வந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாசார

மரபும் இவ்வாறே வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. வடஇலங்கையிற் கோயில்கள் இந்துக்களின் வாழ்க்கை முறைகளோடு பின்னிப் பிணைந்திருந்ததோடு, தலைமுறை தலைமுறையாக இந்துப்பண்பாட்டினைக் கையளித்தும் வந்துள்ளன. அந்தவகையில் இந்துக்களுடைய வழிபாட்டில் சமயம் வகிக்கின்ற முக்கிய பங்கினை எடுத்துக் காட்டும் சான்றுகள் கோயில்களே எனக் கூறப்படுகின்றது (சண்முகதாஸ்,2001), எனவே கோயில்கள் சமயஉணர்வுகளோடும், சமூகநம்பிக்கைகளோடும் ஒன்றாகக் கலந்து இந்துசமயத்தின் பிரதான வடிவமாக விளங்கிவருகின்றன எனில் மிகையன்று.

**வட இலங்கையில் இந்துக்கலையழிவுக் கொள்கை**

இலங்கையின் வடபகுதியில் எண்ணிக்கையில் அதிகமான கோயில்கள் காணப்படுகின்றன. கி.பி.16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஐரோப்பியரான போத்துக்கேயர் ஆட்சியிலும், ஒல்லாந்தர் ஆட்சியின் முற்பகுதியிலும் கடைப்பிடிக்கப்பட்ட கலையழிவுக் கொள்கை காரணமாக வரலாற்றுப் பெருமைமிக்கக் கோயில்கள் உட்பட எண்ணிக்கையில் அதிகமான கோயில்கள் அழிக்கப்பட்டமையும், அதன்காரணமாக இந்துக்களது வாழ்வியல்முறைகள் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளமையும் வட இலங்கையில் இந்துக்கோயில்களின் வளர்ச்சியில் மிகப்பாரிய பின்னடைவை ஏற்படுத்தியிருந்தன. இந்து வழிபாட்டுத்தலங்களின் அழிபாடுகளைக் கொண்டே ஐரோப்பியரின் கோட்டைகள் கட்டப்பட்டன. இந்துக்கோயில்கள் இருந்த இடத்தில் தேவாலயங்கள் கம்பீரமாக எழுந்து நின்றன(சிவசாமி.வி, 1992). ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியிலும் பிரித்தானியராட்சியிலும் வழங்கப்பட்ட சமயசுதந்திரம் காரணமாக இந்துக்கோயில்கள் மீண்டும் எழுச்சி பெற்றபோதும் பெரும்பாலான கோயில்களில் இடம்பெற்ற திறமையற்ற, நிர்வாகச் சீர்கேடுகளுடைய முகாமை காரணமாக அவை இந்துப் பண்பாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் தடையாக இருந்தனவெனலாம். கி.பி.19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட இந்துசமய மறுமலர்ச்சியின் விளைவாக புனரமைக்கப்பட்ட அல்லது புதிதாக கட்டப்பட்ட கோயில்களும் ஓரளவுக்கு இந்துக்களின் சமூக, சமய, ஆன்மீக வாழ்வினை வளப்படுத்தி நின்ற போதும் அவற்றுள் பெரும்பாலான கோயில்களில் நிர்வாக - முகாமைத்துவப் பிரச்சினைகளும் நிலவியிருந்தன. மேலும் வடக்குக்கிழக்கை 30 ஆண்டுகளாகப் பாதித்துவந்த போர்களும் இடப்பெயர்வுகளும் கோயில்களை மையப்படுத்திய வாழ்வை சிதைத்தன. கோயில்கள் அழிவடையும் நிலைக்குச் சென்ற அதேவேளை அழிவடையாதிருந்த கோயில்களிலும் மீண்டும் கட்டப்பட்ட கோயில்களிலும் கோயிலுரிமை, நிர்வாக ஒழுங்கு போன்றவற்றில் முரண்பாடுகள் தலைதூக்கின.

**இந்துக்கோயிற் பிரச்சினைகள்**

பொதுவாக யாழ்ப்பாணத்துக் கோயில்களிற்பல ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாகமுறைமையைக்கொண்டிருக்கவில்லை எனலாம். இவற்றை ஒழுங்குபடுத்துவதிலோ, அங்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலோ அரசும் அக்கறை காட்டவில்லை. ஆறுமுகநாவலருடைய பிரசுரங்களில் கோயிலில் நித்தியபூசை, நைமித்தியபூசை, திருவிழா தவறாது நடைபெறவும், கோயிலதிகாரிகள் தமக்குரிய கடமையிருந்து தவறின் அவர்களைத் தண்டிக்கவேண்டியது அரசின் கடமையென வலியுறுத்தியதோடு, கோயிற் கணக்குகளை யாவரும் அறியச்செய்வது கோயிலதிகாரிகளது பொறுப்பு எனவும் வாதாடினார் கைலாசபிள்ளை, 1955). இக்காலப்பகுதியில்

அரசாங்கம் கோயிலில் ஏற்படும் நிர்வாகப் பிரச்சனைகளில் தலையிட்டிருந்தால் அங்கு நிலவிவரும் நிர்வாகச்சீர்கேடுகள் களையப்பட்டிருக்கலாம். 1890இல் வண்ணை சைவப்பிரகாசவித்தியாசாலையில் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில் கோயில் நிர்வாகப்பிரச்சனைகள் தொடர்பாகவாதிக்கப் பட்டு, சேர்.பொன்.இராமநாதன் மூலம் சட்டநிருபணசபைக்கு முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டது (Handsard, 1916). அதில் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப் பட்டிருந்தன,

1. தீவடங்கிலுமுள்ள கோயில்களின் குறிப்பாக வடமாகாணத்திலுள்ள வைகளினது வருடவருமானம் இலட்சம் ரூபாவாகும். தகுந்த நிர்வாகத்தினாலும் திறமையான கட்டுப்பாட்டினாலும் இவ்வருமானத்தை அதிகரிக்கலாம்.
2. கோயில்களது தன்மைக்கெதிராகவும் காணிக்கை கொடுத்தவர்களது நம்பிக்கைக்கெதிராகவும் கோயில் வருமானம் அர்த்தநாசம் பண்ணப் படுகின்றது (கோயிலதிகாரிகளால்).
3. வீணாகவிரயம் செய்யப்படும் பணத்தை நல்லமுறையில் உயர்தரக்கல்விக்காகச் செலவிடலாம்.

சமகாலப்பத்திரிகைகளில் மேற்படி முறைப்பாட்டினை ஆதரித்து கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தன(Hindu Organ, 27.12.1893, 06.09.1893) ஆனால் அரசாங்கம் இவ்விடயத்தில் தலையிடத் தயக்கம் காட்டியது. 1910இல் நம்பிக்கைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் இந்துகோயில் நிர்வாகம் கொண்டுவரப்பட்டபோதும், அதனால் நிர்வாகப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தவோ, தீர்வுகளை வழங்கவோ இயலவில்லை என்பதை இன்றுவரை யாழ்ப்பாண இந்துக்கோயில் தொடர்பான பிரச்சினைகள் எடுத்துக்காட்டுகின்றன.

இந்துக்கோயில்களில் பிரச்சினைகள் கட்டுப்படுத்த முடியாதுபோனமையினால் பூசை செய்பவர்களுக்கிடையேயும், உரிமையாளர் - முகாமையாளர் - பணியாளர் இடையேயும் உரிமையாளர் - திருவிழாக்கள் செய்வோரிடையேயும் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டு, கோயில் வளர்ச்சியில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியிருப்பதனைக் காண்கின்றோம். இத்தகைய முரண்பாடுகள் முற்றியநிலையில் அவை நீதிமன்றம் வரை சென்றதை வரலாற்றுரீதியாகக் கண்டுகொள்ள முடிகின்றது. வரலாற்றுப் பெருமையுடைய பிரசித்திபெற்ற கோயில்களும் இந்நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டமையைக் காணலாம். நல்லூர் கந்தசுவாமிகோயில் (இந்துசாதனம், 20.05.1896,03.06.1896, உதயதாரகை, 30.04.1896,19.08.1897), மானிப்பாய் மருதடி விநாயகர்கோயில்(Morning Star, 01.08.1889), நயினாதீவு நாகபூசணி அம்மன்கோயில்(Morning Star, 04.07.1895), கீரிமலைச் சிவன் கோயில்(இந்துசாதனம் 08.07.1896), சந்நிதி முருகன்கோயில்(Morning Star, 12.09.1895) போன்றவை உதாரணங்களாகக் கூறத்தக்கன. யாழ்ப்பாணச்சரித்திரம் என்ற நூலை எழுதிய முதலியார் இராசநாயகம் அந்நூலில் பின்வருமாறு குறிப்பிடுவது சுட்டிக்காட்டத்தக்கது.

"எமது தேசத்தில் மூலைக்குமூலை பலகோயில்கள்பெரும்பொருள்செலவு செய்து கட்டப்பட்டுப் பூசைக்கு வழியின்றியும், நடத்துமதிகாரி இருந்தால் எனதுனதென்று வழக்குப் பேசியும், வழக்குச் செலவாற் கோயிற்பொருளும்கைப்பொருளும் இழந்தும் இப்படியேபலகேடுகள்அடைந்தும்அல்லுறும் கோயில்கள் மிகப்பல" (இராசநாயகம்,1934)

உதயதாரகைப் பத்திரிகை பின்ருமாறு கூறுகின்றது,

"கஷ்டப்பட்டு உழைக்காமல் சும்மா வருகின்ற பணத்தின் காரணமாக

உரிமையாளருக்கும் மனேச்சர்மார்களுக்கும் இடையிற் சண்டைகள் ஏற்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் எந்தவொரு கோயிலும் பிரச்சினைகள் இல்லாமல் சமாதானமாக நிர்வகிக்கப்படுவதில்லை" (Morning Star, 16.05.1889).

மேற்படி கூற்று பெரும்பாலான கோயில்களில் பிரச்சனைகள் இருந்ததையும், இவ்வாறான பிரச்சனைகள் அக்கோயில்களைப் பலவீனப்படுத்தியதையும் எடுத்துக் காட்டுகின்றன. கோயில்கள் தொடர்பான பிரச்சினைகளில் நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகளே முக்கியமானதெனலாம். ஏனெனில் கோயில்கள் செம்மையாக நிர்வகிக்கப்படுமாயின் பெருமளவுக்கு ஏனைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளமுடியும். கோயில் நிர்வாகிகளிடம் காணப்பட்ட திறமையின்மைக்கு அடிப்படையாக இருந்த ஒரு காரணம் குறித்து 1890 இல் இந்துசாதனம் பத்திரிகைக்கு அவதானி என்பவர் எழுதிய கடிதம் தெரிவிப்பதாக உள்ளது.

"நம்முடைய கோயில் மனேச்சர்மார்களுக்குப் பூமிசாஸ்திரம் தெரியாது. உலகத்திலுள்ள குடிசனத்தொகை தெரியாது. சமயங்களுடைய தொகை தெரியாது. தெற்கே கொழும்புக்கும், வடக்கே சிதம்பரத்துக்கும் போய் வந்துவிட்டால் உலகம் முழுவதும் சுற்றிக்கொண்டு வந்துவிட்டோம் என்பார்கள். புறச்சமயிகள் இங்கிவிசு முதலிய பாஷைகளிலே பழிக்கின்றார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் தமிழிலாயினும் இங்கிலீசிலாயினும் பத்திரிகையே வாசிக்கிறதில்லை. ஐந்தாறு கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் நீங்க மற்றெல்லோரும் உலகத்திலே சைவர்கள் என்பது அவர்களது துணிவு. இவ்வளவு அறிவுடையவர்கள் தாம் நம்முடைய பூர்வ சென்மத் தத்துவத்தால் மனேச்சர்களாயிருக்கின்றவர்கள்" (இந்துசாதனம், *08.07.1896*).

பொதுவாக கோயில்களின் இயக்கமானது பூசகர் (பிராமணர், சைவக் குருமார்), முகாமையாளர், பணியாட்கள் போன்றோரை மையப்படுத்தி நடைபெறுவதாகும். இம்மூன்று தரப்பினரும் முறையே பூசை முதலிய வழிபாட்டு நெறிகளோடும், நிர்வாகம் முதலிய செயற்பாடுகளோடும், கோயில்கள் தொடர்பான பல்வேறு பணிகளோடும் தொடர்புடையவர்களாவர். சில கோயில்களில் பூசகர்களையும், பணியாளர்களையும் இயக்குபவராக, கண்காணிப்பவராக, கட்டுப்படுத்துபவராக கோயில் உரிமையாளர் விளக்குவதைக் காணலாம். இன்னுஞ்சில கோயில்களிலே கோயிலுரிமை ஒருவருடையதாகவும், அவரே முகாமையாளர் ஒருவரை நியமிக்கும் முறையும் காணப்படுகின்றது. இதனை விட நிர்வாகசபையின் கீழ் சில கோயில்கள் நிர்வகிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் இவர்களிடையே ஆன்மீகநோக்கு, ஒற்றுமை, புரிந்துணர்வு, சமூகநோக்கு, செம்மையான செயற்திறன் போன்றன நிலவும் போது கோயில்களின் செயற்பாடும், அவை நிறுவப்பட்டதன் நோக்கும் செம்மையுறும். இவர்களில் ஒருவர் போட்டி, பொறாமை, பேராசை, ஆதிக்க எண்ணப்பாங்கு முதலிய குணங்களில் ஒன்றைப் பெற்றிருந்தாலும் அது கோயிலின் இயங்குமுறையைப் பாதிப்பதாக அமைவதோடு நிர்வாகத்திற் பல பிணக்குகளுக்கும் வழிவகுக்கும்.

கோயில் நிர்வாகத்தால் பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியாதபோதும், கோயில் நிர்வாகத்திலேயே முறைகேடு, ஊழல் முதலான பிரச்சினைகள் நிலவியபோதும் அவை காலத்துக்குக் காலம் நீதிமன்றத்திற்கும் கொண்டு செல்லப்பட்டன. நீதிபதியாகவிருந்த திரு. திருநாவுக்கரசு (விகடகவி),' நீதிமன்றத்துக்கு வரும் வழக்குகளில் கோயில் தொடர்பான வழக்குகளே அதிகம்" (நேர்காணல்: *திருநாவுக்கரசு, 12.08.2005*) எனக்குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

கோயில் தொடர்பான வழக்கேடுகளை ஆராய்கின்றபோது அவை கோயிலுரிமை, கோயில் சொத்துக்களின் மேலுரிமை, கோயிலின் பூசையுரிமை, மடங்களுக்குரிய ஆதனம், கோயில் சொத்துக்களை நிர்வகிக்கும் உரிமை, திருவிழா உபயகாரரிடையேயான போட்டி, கோயில் சொத்துக்களை அபகரித்தல் ஆகியவற்றின் பொருட்டு வழக்குகள் பதியப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். சான்றாக மானிப்பாய் மருதடிப் பிள்ளையார்கோயில் தொடர்பான வழக்குகளை இங்கு நோக்கலாம். 1821இலேயே மருதடி பிள்ளையார்கோயில் நிர்வாகம், கோயிலுரிமை சம்பந்தமான பிரச்சினைகள் ஆரம்பமாயின. இதன் தொடர்ச்சியாக 1883 இலும் ஒரு பிணக்கு ஏற்பட்டது. இக்கோயிலின் அருச்சகரான குமரகுருபரர் என்பவரின் சந்ததியாருக்கும் கோயில் மணியகாரராகிய சு.நவரத்தினசிங்கம் என்பவருக்கும் இடையிலான முரண்பாடு நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. தீர்ப்பின் பிரகாரம் சைவக்குருமார் கோயிலில் இருந்து விலக்கப்பட்டனர். மணியகாரர் மேல் தொடர்ந்த வழக்குத் தள்ளப்பட்டது. மணியகாரரால் நியமிக்கப்பட்ட பிராமணர்கள் அருச்சகராகப் பூசை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டனா(இராசநாயகம்,1934).

1889ஆம் ஆண்டு மேற்படி கோயிலின் பிராமணர் ஒருவருக்கும், கோயில் பண்டாரத்துக்கும் இடையிலான இன்னொரு பிணக்கில் குறித்த பிராமணரை கோயிலில் இருந்து வெளியேறும்படி, கோயிலின் பண்டாரம் கட்டளையிட்டதோடு, கோயிலுக்குட் சென்று அவரை வெளியேற்றவும் முயற்சி செய்தார். ஆனால் பிராமணர் கதவைப் பூட்டிக் கொண்டு கோயிலுக்குள் இருந்துவிட்டார். மாலைப்பொழுதில் மணியகாரர் உதவியால் கதவு திறக்கப்பட்டது. கோயில் உரிமையாளர் மேற்படி பண்டாரத்திற்கு அக்கோயிலில் குறித்த அளவு உரிமை கொடுக்காமையால் இம்முரண்பாடு ஏற்பட்டது(morning star,01.08.1889). மேலும் இப்பிணக்கு நீதிமன்றத்தில்வழக்கிடப்பட்டது. மேற்படி கோயில் சம்பந்தப்பட்ட பிறிதொரு வழக்கில் எதிரிகள் நால்வருள் மூவர் விடுதலை செய்யப்பட்டதையும், ஒருவர் நான்குவருட சிறையும், 20அடிகளையும் பெற்றதையும் உதயதாரகை என்ற பத்திரிகை தெரிவிக்கின்றது(உதயதாரகை,07.08.1890). 1896இல் பிறிதோர் முரண்பாடு இக்கோயில் முகாமையாளரிடையே ஏற்பட்டதை இந்துசாதனம் பத்திரிகையூடாக அறிய முடிகின்றது(இந்துசாதனம்,22.06.1896). இத்தகைய செய்திகளில் இருந்து மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலில் நீண்டகாலமாகப் பிரச்சினைகள் இருந்து வந்ததையும், அவற்றுட் பெரும்பாலானவை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதையும்அவதானிக்கலாம். இன்றைய காலகட்டத்திலும் அக்கோயிலில் முரண்பாடுகள் தலைதுக்கியுள்ளதை யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற வழக்கேட்டிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயிலில் நிலவிய பிரச்சினையொன்று நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டதையும் இங்கு நோக்கலாம். 1897ஆம் ஆண்டு நீதிபதி ஹோட்டன் முன்னிலையில் இக்கோயில் தொடர்பாக ஒரு வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் பரமசாமிக்குருக்கள் என்பவர் வழக்காளியாகவும் நாகநாதர் வேலுப்பிள்ளை, இரகுநாதர் சரவணமுத்து, கார்த்திகேசு இராமலிங்கம், இராமலிங்கர் கார்த்திகேசு, இராமச்சந்திரர் முத்துக்குமாரு போன்றோர்எதிராளிகளாகவும் இருந்தனர். வழக்காளி சார்பாக நியாயவாதி கனகசபை, சட்டத்தரணி ஸ்ரான்டன்பேர்க் போன்றவர்களும் எதிராளிகள் சார்பாக சட்டத்தரணி காசிப்பிள்ளை, கதிர்வேல் போன்றவர்களும் வாதிட்டனர். முடிவில் இவ்வழக்கு வலிகாமம் மேற்கு மணியகாரன் எ.ஐ.இரகுநாத முதலியார், யாழ்ப்பாண மாவட்ட

நீதிமன்ற துவிபாக்ஷகரான பி.வி.அம்பலவாணர் முதலியோரை மத்தியஸ்தகராகக் கொண்ட சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வழக்கின் தீர்ப்புக் கூறப்பட்டபோது பரமசாமிக்குருக்கள் வைரவநாதக்குருக்கள், இராமலிங்கர் கார்த்திகேயர், இராமலிங்கர் முத்துக்குமாரு ஆகியோர் பிரதம முகாமையாளர்களாகவும், பரமசாமிக்குருக்கள் கோயிலின் பிரதமகுருக்களாகவும், இராமலிங்கர் கார்த்திகேயர், இராமலிங்கம், வேலாயுதர் கதிரித்தம்பி ஆகியோர் உபமுகாமையாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுக் கோயில்நிர்வாகம் மேற்கூறியவர்களிடம்( நயினாதீவு ஸ்ரீநாகபூசனி அம்மன்கோயில் திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர்,1983) ஒப்படைக்கப்பட்டது. இத்தீர்ப்புடன் கோயில் நிர்வாகம் தொடர்பாக ஒன்பது நடைமுறைகளும் முன்வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து கோயில் சமாதானமான முறையில் நிர்வகிக்கப்பட்டது. ஆயினும் தற்காலத்திலும் அக்கோயிலில் நிர்வாகப்பிணக்குகள் நடைபெற்று, பிரதேசசெயலரால் நியமிக்கப்பட்ட குழுவினரால் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

தற்காலத்தில் நடைபெறும் வழக்குகளில் நல்லூர் வீரகாளியம்மன்கோயில் வழக்கு பிரசித்தி பெற்றதாகும். 1980 ஆண்டு யாழ்ப்பாண நீதிமன்றத்தில் பதியப்பட்ட வழக்கின் விசாரணைகள் இன்றுவரை (2015) நடைபெற்று வருகின்றன. இக்கோயிலுக்குரிய வழக்கேடு நான்கு தொகுதிகளாக இணைக்கப்பட்டுள்ளமை கவனத்திற்கொள்ளத்தக்கது(வழக்கேடு, இல.7170) கோப்பாயிலுள்ள பாலனை கண்ணகி அம்மன்கோயிலின் அறம்சார் நம்பிக்கைச் சொத்துக்குத் தாமே நம்பிக்கைப் பொறுப்பாளர் என்று கூறி, அவ்வாறே இயங்கவும் சிலர் முற்பட்டனர். இச்செயற்பாட்டால் கோயிலின் பராமரிப்பும் பூசைகளும் பாதிக்கப்பட்டமையால் இப்பிரச்சனை நீதிமன்றத்தில் வழக்காக பதியப்பட்டிருந்தது(வழக்கேடு, இல.03). மேலும் நீராவியடி ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோயில்(வழக்கேடு, இல.100), பறாளாய் முருகமூர்த்தி ஆலயம் (வழக்கேடு, இல.122), நீர்வேலிப் பிள்ளையார்கோயில் (வழக்கேடு, இல.115), போன்ற பல கோயில்களின் வழக்குகளும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றுள்ளன.

அனலைதீவு ஐயனார்கோயில் நிர்வாகசபைக்கு எதிராக அக்கோயிலில் பரம்பரையாக திருவிழா செய்துவரும் உபயகாரர் வழக்குத் தொடர்ந்துள்ளதையும் அவதானிக்கமுடிகின்றது(வழக்கேடு, இல.29). இவற்றினை நோக்கும்போது பெரும்பாலான கோயில்கள் காலத்துக்குக்காலம் நிர்வாகம் உள்ளிட்ட பிரச்சனைகளால் நீதிமன்ற வழக்குகளுக்கு உள்ளாகியிருந்ததை அறிந்து கொள்ளமுடிகின்றது. இதனால் கோயில்களின் செயற்பாடுகள் தடைப்பட்டிருந்ததோடு சமய வாழ்வும் பாதிப்புற்றது. சில கோயில்களில் முரண்பாடுகள் தலைதூக்கியபோது விழாக்கள், பூசைகள்கூட நிறுத்திவைக்கப்பட்டன(இந்துசாதனம், 23.12.1896) சிலகோயில்கள் மூடப்பட்ட செய்திகளையும் அறிகின்றோம்(இந்துசாதனம், 05.03..1897).

நிறைந்த வருமானத்தைக் கொண்டிருக்கும் சில கோயில்கள் அவ்வருமானத்தினாலும் பிரச்சனைகளை எதிர்கொள்கின்றன என்பதும் மறுப்பதற்கில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்து சைவமறுமலர்ச்சி பற்றி ஆராய்ந்த அருமைநாயகம் அக்காலக் கோயில்களின் வருமானம் ஏற்படுத்திய பிரச்சனைகள் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இந்துக்கோயில்கள் தனிப்பட்ட முயற்சியால் கட்டப்பட்டபோதும் அவற்றைப் புதுப்பிப்பதற்கும் திருத்துவதற்கும் பொதுமக்களும் தாராளமாகப் பணவுதவி புரிந்தனர். மேலும் பலர் காணிக்கையாகத்

தமது அசைவற்ற ஆதனங்களையும் அவற்றால் வரும் வருமானத்தையும் கோயில்களுக்குக் கொடுத்தனர். ஆனால் கொடுக்கப்பட்ட பணமும் பொருள்களும் ஏனைய காணிக்கைகளும் சமயவிருத்திக்கும் கோயில் தேவைகளுக்கும் உதவாது கோயில் முதலாளிகளது பிரத்தியேக தேவை களுக்கும் ஆடம்பரச் செலவுகளுக்கும் உதவின. இந்தியக் கோயில்களைப்போல ஈழத்திலுள்ள இந்துக்கோயில்கள் ஆங்கில அரசாங்கத்தின் கீழும், மேற்பார்வையின்கீழும் கொண்டு வரப்படவில்லை. இதனாற் கோயில் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்த முடியாது போயிற்று. கோயில் நிர்வாகிகள் தம்மிச்சை போல நடக்க உதவியது" (அருமைநாயகம், *(1976)*

19ஆம் நூற்றாண்டில் நிலவிய வருமானம் தொடர்பான இதுபோன்ற நிர்வாகப் பிரச்சினைகள் 21ஆம் நூற்றாண்டிலும் நிலவிவருகின்றமை வருந்தத்தக்கதாகும். இதற்குதாரணமாக விடுதலைப்புலிகள் காலத்தில் எதிர்நோக்கிய பாரிய நிர்வாகப் பிரச்சினையும் வல்லிபுரம் விஷ்ணு ஆழ்வார்கோயில் எதிர்நோக்கிய சாதி அடிப்படையிலான கோயிற்சொத்துரிமை கோரலும் யாழ்ப்பாணத்தின் இந்துக்கோயில் முகாமைத்துவப் பிரச்சினைகளை மிகத்துல்லியமாகக் கோடிட்டுக் காட்டு கின்றன. இந்திய அமைதிகாக்கும் படையினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த காலத்தில் இந்துக்கோயில் பிரச்சினைகள் வேறொருவடிவம் பெற்றுக்கொண்டதோடு கோயில்கள் தேசியமயமாக்கப்படுவதற்கான ஒரு புறச்சூழ்நிலையும் உருவாகியிருந்தது. வண்ணார்பண்ணை சிவன்கோயில் தேசியமயமாக்கப்பட்டமைக்கு எதிராக முன்வைத்து வரையப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக வரைந்துகொடுத்த ஒரு முறைப்பாட்டுக்கடிதத்தில் இடம்பெற்றுள்ள பின்வரும் தொடர் அதனை நிரூபணம் செய்கின்றது.

"இந்தியப்படைகள் வெளியேறியதன் பின்னர்ரி.ஆர்.ஓ.(தமிழர்புனர்வாழ்வுக்கழகம்) எம்மிடம் கோயில் சம்பந்தமாகத் தொடர்பு கொண்டது. அப்போது றூட் சிறீ என்பவர் கோயில் ஓர் நிர்வாகசபையின் கீழ் இயங்கவேண்டுமென்று எம்மிடம் வற்புறுத்தியதைத் தொடர்ந்து, எமது பூரண விளக்கத்தின் பின் அவ்வற்புறுத்தலை விடுத்து, எம்வருமானத்தின் ஒருபகுதியை ரி.ஆர்.ஓ.வுக்குக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். இதற்கு நாம் மனமாரச் சம்மதித்தோம். ரி.ஆர்.ஓ. கடைகள், கட்டடங்கள், காணிகளுக்கு இன்றைய வாடகையை புதிதாக நிர்ணயித்து எமக்கு முன்னைய வாடகையை கையளித்தது. மிகுதியை ரி.ஆர்.ஓ. எடுத்துக்கொண்டது. ரி.ஆர்.ஓ.வின் வேண்டுகோளுக்கிணங்க ரி.ஆர்.ஓ. காரியாலயத்திலிருந்து முன்னைய வாடகை மதிப்பீட்டிற்கான ரசீதுகளை நாமே வழங்கி வந்தோம். மிகுதி மேலதிக வாடகைப்பணத்திற்கு (அதாவது புதியவா டகைமதிப்பீட்டின்படி) ரசீதுகளை ரீ.ஆர்.ஓ. வழங்கிவந்தது.". (முறைப்பாடுக் கடிதம் - *18.04.1991)*

வல்லிபுரம் விஷ்ணுகோயிற் பிரச்சி னையானது வேறொரு வடிவில் காணப் படுகின்றது அதாவது இருவேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் வல்லிபுரக் கோயிலின் நிலவுரிமத்திற்காக நீதிமன்றில் மிகவும் நீண்டகாலப் போராட்டம் நடாத்திவந்துள்ளார்கள். இதுபற்றிய நீதிமன்றத்தீர்ப்பின் ஒருபகுதியை மேற்கோளாகத்தருவது அக்கோயில் பற்றிய பிரச்சினையை விளங்கிக்கொள்ள உதவும்.

"சொல்லப்பட்ட வல்லிபுரம் என்னும் காணியில்தான் கோயில் கட்டப்பட்டி ருக்கிறது. சொல்லப்பட்டவர் வல்லிபுரத்தின் உரிமைக்காரன் என்றும் கூறுகின்றார்கள். சொல்லப்பட்ட வல்லிபுரஆழ்வார் சந்ததி இல்லாமல் இருக்குங்காலத்தில் எங்களின்

மூத்தோர் இந்தக்கோயிலைஆட்சி செய்துவந்தார்கள் என எதிரியின் தரணிகள் குறிப்பிடுகின்றார்கள். பொதுவாகச் சொல்லப்பட்ட வழக்காளிகளைத் தானத்தார் என்று சொல்லப்படுகின்றது. வழக்காளிகள் கூறுவதன்படி வல்லிபுரத்தின் ஒன்றுவிட்ட சகோதரம் வேலருடைய சந்ததியே தாங்கள் என்று கூறுகின்றார்கள். எதிராளிகளும் வழக்காளிகளைத் தானத்தார் என்பதனை மறுக்கவில்லை. அவர்கள் வேளாளருமல்ல. ஆனால் எதிராளிகள் தானத்தார் என்ற சாதி இலங்கையில் வேறு எப்பாகத்திலாவது இருக்கிறார்களா என்பதனை விளக்கிக் காட்டவில்லை. வழக்காளியின் தரணி சிலஅகராதிகளின் மூலமாகஎடுத்துக்காட்டியதென்னவென்றால் தானத்தார் என்ற சாதி விக்ஷ்ணுபக்தர்கள் என்றும் வேளாளரின் உயர்ந்த சாதி என்றும் வழக்காளிகளை அப்படி கூறுவதென்னவென்றால் அவர்கள் பரம் பரை பரம்பரையாக விக்ஷ்ணுவை வழிபடுகின்றவர் கள் என்றும் அதன்படி இவர்கள் விக்ஷ்ணு ஆலயத்தினை வழிபட்டு வந்தவர்கள் என்றும், ஆனால் அது சைவசமயத்தவர்களது கோயில் அல்லவென்றும் கூறினார். அகராதியில் சொல்லியபடி தானம் என்ற சொல்லிலிருந்துதான் தானத்தார் என்னும் சொல்லுப் பிறந்ததென்றும் தானம் என்று சொல்வது விஷ்ணு நின்றநிலைபரத் திலுள்ள விக்கிரகத்ததை ஆராதிப்பவர் என இரண்டு பிரதானமான அகராதிகள் ஊடாக எடுத்துக் காட்டப்பட்டது. ஆதலால் தானத்தார் என்னும் சொல்லின் கருத்தை எழுதி சாதனங்களுடன் வழக்கில் அணைக்கும்படி கேட்டுக்கொண்டேன். என்னுடைய மனமெண்ணப்படியும் அகராதிகள் வாசித்ததிலிருந்தும் விஷ்ணு நின்றநிலைபரத்தையுடைய விக்கிரகமென்றும் ஒரு காலத்தில் விஷ்ணு ஆராதனைக் குரியோர்களே அதை வணங்கிவந்தார்கள் என்றும் நம்புகின்றேன்.

அகராதிகள் கூறும் தானத்தார் என்பது கோயில்அதிகாரிகள். ஆகையால் வழக்காளி கள் கூறும் தானத்தார் என்பவர்கள் சைவ ஆலயமாக இருந்தாலென்ன- விஷ்ணு ஆலயமாயிருந்தாலென்ன கோயிலதி காரிகளாக இருந்தார்கள். எதிராளி ஒரு மிகச்சாமர்த்தியமான ஒரு பொய்ச்சாட்சி. தானத்தார் என்னும் சொல் ஆணைக்காரர் என்பதனை விளக்கிக் காட்டும்படி செய்துவிட்டார். அவர் தானக்காரரரை கோயிலிலிருந்து கொஞ்சத்தூரத்திற்கப்பால் இருக்கும் தானக்காரக்குறிச்சியாருடன் சேர்த்துப்பிரட்டுவதற்குத் தெண்டித்தார். தானத்தார்கள் கோயிலோடு சம்பந்தப்பட்ட விஸயத்திலுள்ள உத்தியோகத்தர்களில் ஒருவர் என்பதனை நான் மறுக்கிறதிற்கு ஒருவிதமான நியாயமுமில்லை. நான் இன்னும் சொல்லக்கூடியது என்னவென்றால் வழக்காளிகளால் அணைக்கப்பட்ட இரண்டாம் சாதனத்தில் தானம் என்ற சொல் காட்டப்பட்டிருக்கின்றது. ஒல்லாந்தர் காலத்தில் , இங்கிலிஸ் அரசாட்சித் தத்துவகாலத்தில் உறுதி எழுதும்பொழுதும் ஒவ்வொருவரின் சாதியையும் அதில் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். அதுபோல் வேளாளனை 'வெள்' என்றும் நளவனை 'நள்' என்றும் இங்கே தானத்தாரை 'தானம்' என்றும் எழுதப்பட்டிருக்கின்றது. இந்தவிசயத்தையிட்டு எதிரியின் தரணிகள் ஒருவிதமான தடையும் சொல்லவில்லை."

"வழக்காளியின் சாட்சியினால் இணைக் கப்பட்ட வம்சாவழியில் P.7இல் கூறப்பட்ட நன்கொடை உரித்தாளரின் பெயர் இல்லை. ஆதலால் அவர் ஒருதானத்தார் அல்லர். சிங்களத்தில் சமயபூசாரி ஒருவரைக்குறிக்கும் சொல்லைப்போன்று அவரை தவசி என்ற சொல்லால் உறுதியிற் கூறப்பட்டுள்ளது. P.7 என்னும் சாதனம் அவருக்கு ஏதோ நன்கொடை கொடுப்பதாகவும் கோயில் சம்பந்தமாகச் சில கொடை கொடுப்பதா கவும் கோயில் சம்பந்தமாகச் சில

விசேட வேலைகளைச் செய்யும்படியும் அவரைக்கட்டளையிடுகின்றது. அவ்வேலையைச் செய்யும்படி கேட்கப்படும் ஒருவர் தானத்தார் அல்லவென்றும் கோயிலில் வேலைகள் செய்யும்படி மற்றவர்களால் தானத்தாரைக் கேட்க முடியாதென்றும் ஓரளவிற்குப்புலனாகின்றது. வழக்காளியின் சார்பாக அணைக்கப்பட்ட வம்சாவழியை மறுக்க எவ்வித நியாயமுமில்லை. இதிலிருந்து தானத்தார் எண்ணிக்கையானது தொகையிற் கூடியது என்பதும் புலனாகின்றது. P.7 சாதனத்தின்படி நன்கொடை செய்தவரின் ஆதனம் பின்பு பழைய சாதனங்களில் காணப்பட்ட வல்லிபுரஆழ்வார் சுவாமிகோயில் என்னும் பெயர் கண்டனத்தற்கு வந்தது. நான் அறிந்தளவில் வல்லிபுரம் ஆழ்வார் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட கோயிலையே அது குறிக்கும் எனலாம். வழக்காளி அணைத்த தோம்பு ஓலையில் குறிக்கப்பட்ட நிலம் தற்போது மேற்படி கோயிலிருக்கும் நிலத்தையே குறிக்கிறது என்பதனை நான் முற்றாக நம்புகின்றேன். தோம்பு ஓலைச் சொந்தக்காரரரை வல்லிபுரம் ஆழ்வார் என்றும் அவருக்குரிய நிலத்தினை வல்லிபும் என்றும் தெளிவாகக் கூறுகின்றபடியால் ஆட்களின் பெயரும் நிலத்தின் பெயரும் ஒன்றாயிருத்தலில் ஒரு ஆட்சேபனையுமில்லை." (றொட்றிக்கோ, *30.10.1941)*

இங்கு கோயிலுரிமை தொடர்பான பிரச்சனை சாதியடிப்படையில் நிகழ்ந்திருந்ததையும், பெயர் தொடர்பான விளக்கம் ஆராய்ந்து முன்வைக்கப்பட்டு, வாதத்திற்கு உரியதாக இருந்ததைக் காணலாம். இதேபோல 1991இல் பண்டத்தரிப்பில் உள்ள பிரான்பற்று முருகன் கோயிலில் குறிப்பிட்ட சாதியினரை கோயிலினுள் நுழையவிடவேண்டுமென விடுதலைப்புலிகள் நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டனர். இது தொடர்பாக 1965இலும் பிரச்சனைகள் நடைபெற்றிருந்தன. குறிப்பிட்ட காலம்வரை குறைந்த சாதியினர் குறிப்பிட்ட கோயில்களுக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. மேலே குறிப்பிட்ட முருகன்கோயில் நிர்வாகமோ, ஊர்மக்களோ அக்குறிப்பிட்ட சாதியினரை உள்நுழைய அனுமதிக்கவில்லை. அக்காலத்தில் ஊர்ப்பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நியமிக்கப்பட்ட பிரஜைகள்குழு, மற்றும் இணக்கசபைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும், அக்கோரிக்கை நிறைவேறவில்லை. இறுதியில் திருவிழாவன்று விடுதலைப்புலிகள் சாதிகுறைந்தவர்களை உள்ளனுமதிக்க முயன்ற சமயத்தில், வானத்தை நோக்கிச் சுட்டனர். ஆனாலும் அம்மக்கள் அக்கோரிக்கைக்கு இணங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (நேர்காணல்: மகேந்திரம், 19.07.2009). கோயில் நிர்வாகம் நீதியின்முன் கொண்டுசெல்லப்பட்டபோதும், அக்கால சாதியடிப்படையிலான சமூக நிலைப்பாட்டின் காரணமாக அப்பிரச்சினை கைவிடப்பட்டதாக அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக்கோயில் பிரச்சினைகளில் குறிப்பிடத்தக்க இன்னொரு விடயம் யாதெனில் தெய்வவிக்கிரகங்கள் மற்றும் கோயில் சார்ந்த பொருட்களோடு தொடர்புபட்டனவாகக் காணப்படுகின்றது. குறிப்பாக உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்ட இந்துக்கோயில்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பொறுத்தவரை இவ்விடயம் கருத்திற்கொள்ளத்தக்கது. இந்துவிக்கிரஹங்கள், கோயிற்திரவியங்கள் மற்றும் தட்டுமுட்டுச் சாமான்கள் யாவும் சூறையாடப்பட்டநிலையில் இந்துமக்கள் பலபிரச்சினைகளை எதிர் நோக்கியவாறு தத்தமது வாழ்வியலைத் தொடர்கின்றார்கள். கலைப்பொருட்களைச் சூறையாடுவோரினால் யாழ்ப்பாணத்திலுள்ள தொன்மைவாய்ந்த சிற்பங்கள், மரத்தாலான கலைப்பொருட்கள் யாவும் திருடப்பட்டு அல்லது அவற்றின் தாற்பரியம் விளங்காது, விற்கப்பட்டுத் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அங்கணாக்கடவையிலுள்ள பலநூற்றறாண்டுப்பழமை

வாய்ந்த மரவேலைப்பாடுகளுடன் காணப்பட்ட கண்ணகையம்மன் கோயில் முற்றாக இடிக்கப்பட்டு, அதன் கலைக்கருவூலங்கள் முஸ்லிம் வியாபாரிகளுக்கு விற்கப்பட்டு விட்டன. அவ்விடத்தில் இப்பொழுது சீமெந்தினால் புதிய கோயில் கட்டப்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளில் கோயில் நிர்வாகம் இறுக்கமான கட்டுக்கோப்பினை நிர்வாக ரீதியாகக் கொண்டிருக்கவேண்டிய அவசியமுள்ளது. கோயில்களில் உள்ள பொருட்கள் எவை? அவை யாரால் வழங்கப்பட்டன? எப்பொழுது வழங்கப்பட்டன? அதன் சிறப்பம்சம் யாது? அதன் நிறை மற்றும் அளவு யாது? போன்ற பல விபரங்களைக் கொண்ட ஆவணங்கள் பேணப்படுவதில்லை. பொருட்கள்களவாடப்படுகின்றசந்தர்ப்பத்தில் நீதியின் முன் கொண்டு செல்லப்படும் போது அவற்றின் அடையாளங்களைச் நிர்வாகத்தினால் சரிவர சமர்ப்பிக்க முடியாமற் போய்விடுவதுமுண்டு.

**முடிவுரை**

சமய விழுமியங்களையும், சமூக ஒழுங்குகளையும் பேணவேண்டிய யாழ்ப்பாணத்து இந்துக்கோயில்கள் பல்வேறு வகையான முகாமைத்துவ முரண்பாடுகளினால் தமக்குரிய பணிகளை நிறைவேற்ற முடியாதுள்ளன. குறிப்பாக நிதி மற்றும் சொத்துக்கள் தொடர்பாக நிர்வாகம் செம்மையாக செயற்றிறன் உடையதாக இருக்குமெனில் ஏனைய சீர்கேடுகளையும் பிரச்சினைகளையும் நீக்கக்கூடியதாக இருக்கும். நிர்வாகத்திலேயே சீர்கேடுகளும் முரண்பாடுகளும் தலைதூக்குமெனில் கோயில்கள் தோற்றம் பெற்றதன் நோக்கை நிறைவு செய்யமுடியாமற் போய்விடும். இடைக்காலத் தென்னிந்தியச்சோழர் காலக் கோயில்கள்போலபரந்தசமுதாயப்பணிகளைச் செய்யமுடியாது போனாலும் ஒரளவுக்கு ஆன்மீகப் பணிகளையாவது செம்மையான நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளலாம். அதிக வருவாய்களினால் கட்டிடங்களினாலும் திருவிழாக்களினாலும் சிறப்பப் பெறுகின்ற கோயில்கள் சமூகநோக்கில் செயற்படுவது அரிதாகவுள்ளது. செல்வச் சந்நிதி, தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில், ஏழாலை வசந்தநாகபூசணி அம்மன்கோயில் போன்ற சில கோயில்களே சமயத்தினூடாக சமூகமேம்பாட்டினை கருத்திற்கொண்டு செயற்படுகின்றன. பெரும்பாலான சமயநெறிகளில் சமயம்சார் வழிபாட்டு இடங்களைக் கட்டுப்படுத்துவதற்குத் அவ்வவ் சமயம் சார்பான நிறுவனங்கள் காணப்படுகின்றன (பௌத்தசங்கம், திருச்சபை போன்றவை). இந்துசமயத்தில் இவ்வாறான கட்டுப்படுத்தும்நிறுவனம்எதுவும்இல்லாமை பெருங்குறைபாடாகும். இந்துகலாசார அலுவல்கள் திணைக்களம், பிரதேச செயலகங்கள், சமூகத்தில் பிரபலமானவர்களுடன் இணைந்தும் தனித்தும் கோயில்நிர்வாகத்தில் சில நடைமுறைகளைக் கொண்டுவரமுயற்சிகள் செய்கின்றன. ஆனால் இதற்குச் சிலகோயில் நிர்வாகிகள், கோயிலுரிமையாளர்கள்பூரணஒத்துழைப்பை வழங்காதிருப்பதும் கவனத்திற்குரியதாகும். ஒவ்வொரு இந்துக்கோயிலும் செம்மையான நிர்வாகத்தை மேற்கொண்டு சமயத்தினூடாக சமூக மேம்பாட்டினை கருத்திற் கொண்டு செயற்படுமாயின் இன்றைய இந்து சமூக, சமயவளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. செம்மையான நிர்வாகத்தினாலேயே கோயில்களைச் சிறந்த ஆன்மீகமையங்களாக மாற்றமுடியும் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்கமுடியாது.

**உசாத்துணைநூல்கள்**

1. Nilakantha Sastri, K.A (1975) The cholas (Reprinted) Avvai Achukkoddam, India, University of Madras. P.654

2. சண்முகதாஸ்., அ. (2001), 'யாழ்ப்பாண சைவக்கோயில்கள் பற்றிய ஆய்வு-ஒரு வரலாற்று நோக்கு' Papers on Tamil Linguistics, Literature and Culture P.216
3. சிவசாமி.வி. 'வரலாற்று மூலங்கள்', யாழ்ப்பாண இராச்சியம், சி.க.சிற்றம்பலம், (பதி.ஆ) (1992), யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி, பக்.13-14
4. மேலது , ப.202
5. கைலாசபிள்ளை.த., (1955), (பதி.ஆ), ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, வித்தியானுபாலனயந்திரசாலை, சென்னை, பக்.28-37
6. Handsard, 1916, pp.246 – 248
7. Hindu Organ, 27.12.1893, 06.09.1893
8. இந்துசாதனம், 20.05.1896, 03.06.1896. உதயதாரகை 30.04.1896, 19.08.1897
9. Morning Star 01.08.1889
10. Morning Star 04.07.1895
11. இந்துசாதனம், 08.07.1896
12. Morning star, 12.09.1895
13. இராசநாயகம்.செ., (1934), யாழ்ப்பாணச் சரித்திரம், வண்ணார்பண்ணை சிறி சண்முகானந்தா அச்சகம், ப.116
14. Morning star, 16.05.1889
15. இந்துசாதனம், 08.07.1896
16. 12.08.2005.இல் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதியுடன் உரையாடிய போது கூறியது.
17. மு. கூ. நா. இராசநாயகம்.செ., ப.140
18. Morning star , 01.08.1889
19. உதயதாரகை, 07.08.1890
20. இந்துசாதனம், 22.06.1896
21. நயினாதீவு ஸ்ரீநாகபூசனி அம்மன்கோயில் திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர், 1983, பாகம்II, அறங்காவலர் சபை வெளியீடு, பகுதி iii, iv
22. வழக்கேடு, நம்பிக்கைச் சொத்து, இல.7170
23. வழக்கேடு, நம்பிக்கைச் சொத்து, இல.03
24. வழக்கேடு, நம்பிக்கைச் சொத்து, இல.100
25. வழக்கேடு, நம்பிக்கைச் சொத்து, இல.122
26. வழக்கேடு, நம்பிக்கைச் சொத்து, இல.115
27. வழக்கேடு, நம்பிக்கைச் சொத்து, இல.29
28. இந்துசாதனம், 23.12.1896
29. இந்துசாதனம், 05.03.1897
30. அருமைநாயகம்,அ., (1976), 'பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்து சைவ மறுமலர்ச்சி', திருக்கேதீஸ்வரம் திருக்குடத் திருமஞ்சன மலர், திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபை வெளியீடு. ப.80
31. முறைப்பாடுக் கடிதம் - 18/04/1991, கந்தப்பச்செட்டியார் [தர்மகர்த்தாவும் மனேசரும்].
32. றொட்றிக்கோ , கூட்டு டிஸ்ற்றிக் நீதிபதி , 30.10. 1941
33. நேர்காணல் - செ.மகேந்திரன், வயது.76, ஓய்வுபெற்ற கிராமியவங்கி ஊழியர், பிரான்பற்று.
34. அருமைநாயகம், க.,(1980), யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சமூகசீர்திருத்தம் 1900-1957, சில அம்சங்கள், தென்னாசியவியல் கருத்தரங்கு, யாழ்ப்பாணம்.